# நெற்குன்றம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டம்

- பெருநகர-சென்னை-மாநகராட்சியுடன்-இணைக்கப்பட்ட-42 அருகாமை உள்ளாட்சி அமைப்புகளில் நெற்குன்றம் பகுதி 11 வளசரவாக்கத்தில் பணிமனைகள் 145 மற்றும் 148 ல் 2.63 ச.கி.மீ. பரப்பளவில் சுமார் 66.58 கி.மீ. நீளமுள்ள 532 தெருக்கள்/சாலைகளைடையது ஆகும்.

- இப்பகுதிகளுக்கான குடிநீர் திட்டம் 2008 முதல் 2038 வரை 30 ஆண்டுகளை வடிவமைப்புகால அளவாக கொண்டு திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தில் 2038 ஆம் ஆண்டில் 1.28 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள். உத்தேசமாக நாளொன்றுக்கு சுமார் 18.73 மில்லியன் லிட்டர் குடிநீரை பகிர்ந்தளிக்கும் படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புதிட்டம் கீழ் நெற்குன்றம் பகுதிக்கு குடிநீர் வழங்கல் திட்டத்தின் மதிப்பீடுரூ. 1917.00 இலட்சத்திற்கு 28.01.2007-ல் அனுமதி அளிக்கப்பட்டது.

- இத்திட்டத்தின் பணிகள்

1. குடிநீர் குழாய்கள்அமைத்தல் – 66,310 மீ.
2. பிரதானகுழாய்கள்அமைத்தல் - 630 மீ
3. வீட்டு குடிநீர் இணைப்புகள் - 6,246
4. மேல்நிலைத் தொட்டி - 3
5. கீழ்நிலைத் தொட்டி - 1

- ஒப்பந்தவிவரம்

இத்திட்டத்திற்கான ஒப்பந்த ஆணை ரூ. 1460.22 இலட்சத்திற்கு திருவாளர்கள். ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட் அவர்களுக்கு பணிக்காலம் 18 மாதங்களாக 28.07.2010 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் பணிகள் 24.01.2011 அன்று-துவக்கப்பட்டு-23.07.2012ல் முடிவடைய வேண்டும். பணிகள் மிக தாமதமாக-நடைபெற்றதால் இப்பணிக்காக ஒப்பந்தம் 29.11.16 அன்று ரத்து செய்யப்பட்டது. மீதம் உள்ள பணிக்கான ஒப்பந்த ஆணை ரூ.1545.69 லட்சத்திற்கு திருவாளர்கள் வி .வி .வி .கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பணிக்காலம் 15 மாதங்களாக, 16.08.2018 அன்று துவங்கபட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

- <u>**(08.03.2023 அன்று) திட்டபணிகளின் விவரம்**</u>

1. பணிகள்முன்னேற்றம் - 97%

2. பணிக்கானசெலவீட்டுதொகை - 71.84%

3. பணிகள் (உத்தேசமாக) நிறைவுபெறும் நாள் - 31.05.2023